முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: திருமதி K.அறிவொளி, M.A., M.L.,

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் செவ்வாய்கிழமை.

குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.96/2025

(*CNR.No.TNSV01000944/2024*)

விசாரணை நீதிமன்றம்	நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சிவகங்கை.
விசாரணை நீதிமன்ற வழக்கு எண்	ஆண்டு பட்டிகை வழக்கு எண்.148/2014
மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி	தமிழ் நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர், மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய குற்ற எண்.2/2014
எதிர்மேல்முறையீட்டாளர்களின் பெயர்	1. சங்கரநாராயணன் (வயது 48) த/பெ.அங்குசாமி, கட்டனூர், மானாமதுரை தாலுகா, சிவகங்கை. 2. சிவக்குமார் த/பெ.கருப்பையா, வெள்ளிக்குறிச்சி, மானாமதுரை தாலுகா, சிவகங்கை. 3. வெங்கடேஸ்வரன் த/பெ.பாலு, கொத்தங்குளம், மானாமதுரை தாலுகா, சிவகங்கை. 4. ராஜசேகரன் (வயது 43) த/பெ.முனியப்பன், சுந்தரபுரம் அக்ரஹாரம், மானாமதுரை தாலுகா, சிவகங்கை.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:07:49 +0530

21.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

விசாரணை நீதிமன்ற தீர்ப்பு	விசாரணை நீதிமன்றம், எதிரிகள் இதச பிரிவுகள் 409, 120(பி)ன் கீழான குற்றச்சாட்டு முழுவதுமாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் தீர்மானம் செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.
தண்டனை உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா,	**இறுதியாக,** இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டுபட்டிகை வழக்கு எண்.148/2014-ல் கடந்த 29.04.2019-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.
மேல்முறையீடு செய்யப்பட்ட நாள்	12.02.2024
ஆஜராகப் பணிக்கப்பட்ட நாள்	19.12.2025
இந்நீதிமன்ற தீர்ப்பு	21.04.2026

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 01.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.*A*.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.*R*.உதயகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

தீ ர் ப் பு ரை-

இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் ஆண்டு பட்டிகை வழக்கு

எண்:148/2014-ல் உள்ள சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளர் மேல்முறையீட்டாளர் ஆவார்.

2. எதிர்மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:-

இவ்வழக்கில் சிவகங்கை மாவட்டம், திருப்பாச்சேத்தி அரசு டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடை எண்:7664-ல் 26.05.2013-ம் தேதி 1-வது சாட்சி சிவகங்கை டாஸ்மாக் லிமிட் மாவட்ட மேலாளர் அவர்கள் உத்தரவுபடி சாட்சி-2, டாஸ்மாக் தாசில்தார் மற்றும் ஆடிட்டர் உதவியாளர்களுடன் சாட்சி-1 தணிக்கை குழுவாக சென்று மேற்படி மதுபானக்கடையை நூறு சதவீத மாதாந்திர தணிக்கை மேற்கொண்ட போது தணிக்கை இறுதியில் சரக்கு வரவு இருப்பு மற்றும் விற்பனை தொகையில் வங்கியில் செலுத்தாமல் ரூ.6,91,680/- குறைவு தொகையை மேற்படி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்த மேற்பார்வையாளர் 1-வது எதிரி மேற்படி கடையின் விற்பனையாளர் 2 முதல் 4 எதிரிகள் ஒன்று சேர்ந்து கையாடல் செய்து, கையாடல் செய்த பணத்தை எதிரிகள் அனைவரும் பகிர்ந்து கொண்டும், டாஸ்மாக் நிர்வாகத்திற்கு சேரவேண்டிய அரசு பணம் ரூ.6,91,680/-யை கையாடல் செய்து நம்பிக்கை மோசடி செய்த குற்றத்திற்காக குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது இதச பிரிவுகள் 409, 120(பி)-ன் கீழ் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று

பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

4. விசாரணை நீதிமன்றம், எதிரிகள் இதச பிரிவுகள் 409, 120(பி)ன் கீழ் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய மேல்முறையீட்டாளர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

5. மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:

i) விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்ட விதிகளுக்கு புறம்பாகவும் சாட்சிய சட்டத்திற்கு முரணாகவும் பகரப்பட்டுள்ளது.

ii) மேற்படி விசாரணை நீதிமன்றம் வனையப்பெற்ற குற்றச்சாட்டுகளில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 409, 120(பி)-ன் படி கண்டுள்ள சரத்துகளின் படி புகாரும் முதல் விசாரணையும் அமைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு எதிரிகளுக்கு குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும். மேற்படி பிரிவுகளின் கீழ் விசாரணை நீதிமன்றம் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டிருந்த போதும் அதனை மெய்ப்பிக்கும் விதமாக அரசு தரப்பு சாட்சிகள் தனது சாட்சியத்தில் சொல்லப்பட்டிருந்த நிலையில் மேற்படி குற்றப் பிரிவுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளன என கருத்தில் கொண்டு விசாரணை நீதிமன்றம் இந்த எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தண்டனை வழங்கியிருக்க வேண்டும்.

iii) மேலும் புகார்தாரர் தனது புகாரில் கடந்த 26.05.2013-ம் தேதி டாஸ்மாக் கடை எண்:7664-ல் சரக்குகளின் எண்ணிக்கை பற்றி தணிக்கை செய்த போது அங்கு பணிபுரிந்த எதிரிகள் ரூ.6,91,680/- வங்கியில் செலுத்தாமலும், தாங்களாக பங்கு பிரித்துக் கொண்டு அரசிற்கு செலுத்தாமல் கையாடல் செய்த விவரம் தெரிய வந்து புகார் அளிக்கப்பட்டு அதன்படி மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் குற்ற எண்.2/2014 என இதச பிரிவு இதச பிரிவுகள் 409, 120(பி)-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்று பின்பு இதச பிரிவுகள் 409, 120(பி)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iv) மேற்படி விசாரணை நீதிமன்றம் இதச பிரிவுகள் 409-ன் படியான குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில் மேற்படி பிரிவு பொது ஊழியர் அல்லது வங்கியர், வணிகர், தரகு வணிகர், தரகர், அட்டர்னி அல்லது முகவர் என்பவரின் தொழில்முறையில் எந்த வகையிலாவது ஒரு சொத்தின் மீது அந்த சொத்தைப் பொறுத்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்கின்ற நபர் தண்டிக்கப்பட வேண்டிய நபர் ஆவார். மேலும் பிரிவு 405 இதச படி பொது ஊழியர் எந்த முறையிலும் ஒரு சொத்து ஒப்படைக்கப்பட்டிருந்தது அல்லது சொத்தின் மீது ஆதிக்கம் பெற்றிருந்த அந்த சொத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்கின்ற அல்லது அந்த சொத்தை தனது சொந்த உபயோகத்திற்கு மாற்றுகிற நபர் குற்றமுறு நம்பிக்கை மோசடி செயலில் ஈடுபட்ட நபர் ஆகிறார்.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:08:25 +0530

v) மேற்படி பிரிவின் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட 1, 2, 3, 4 எதிரியானவர்கள் பொது ஊழியர்கள் என்ற நிலையில் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்த சொத்தினை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்து குற்றமும் நம்பிக்கை மோசடி செயலில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபணம் ஆகியுள்ள நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி பிரிவுகள் 409 இதசவின் கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து எதிரிகளுக்கு தண்டனை வழங்கியிருக்க வேண்டும். அதை தவிர்த்து மாறாக விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

vi) மேற்படி பிரிவு 120(பி) குற்றம் சுமத்தப்பட்டுள்ள குற்றம் ஒரு சதி என்றால் இரண்டு அல்லது இருவருக்கும் மேற்பட்ட நபர்கள் சட்டத்திற்கு முரணான ஒரு செயலை அல்லது சட்டத்திற்கு முரணான வழியில் சட்டத்திற்கு முரண் அல்லாத ஒரு செய்கையை செய்ய உடன்படும் போது அத்தகைய உடன்படிக்கை குற்றம் ஒரு சதி என வழங்கப்படும். மேற்படி வழக்கில் 1, 2, 3, 4 எதிரிகள் சேர்ந்து அரசிற்கு எதிராக வேண்டுமென்றே சதி செய்து ரூ.6,91,680/- கையாடல் செய்துள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை கருத்தில் கொள்ளாது விசாரணை நீதிமன்றம் மேற்கண்ட 1 முதல் 4 வரையிலான எதிரிகளை விடுதலை செய்திருப்பது சட்டப்படி நியாயபடியும் ஏற்புடையதல்ல.

vii) மேலும் ஒரு அலுவலர் மற்றும் ஊழியர் நிலையிலிருந்து வேண்டுமென்று மோசடி செய்யும் உட்கருத்துடன் வேலை தரும் நபருக்கு சொந்தமான அல்லது அவரது கைவசம் உள்ள அல்லது வேறு தரும் நபருக்கு அல்லது அவருக்கு சார்பாக தான் பெற்றிருக்கிற ஒரு பெருமதியான பத்திரம் அல்லது கணக்கு எதனையும்

அளிக்க மாற்றுகிற பங்கப்படுத்துகிற அல்லது பொய்யாக்குகிற அல்லது வேண்டுமென்றே மோசடி செய்யும் உட்கருத்துடன் பொய் குறிப்பு எழுதுகிற அல்லது அப்படி எழுதுவதற்கு உடந்தையாக இருக்கிற அத்தகைய தாள் புத்தகம் கணக்கும் ஏதேனும் முக்கியமான குறிப்பை விட்டுவிடுகிற மாற்றுகிற அல்லது விட்டுவிடு அல்லது மாற்ற உடனடியாக இருக்கிறார் எவர் ஒருவரும் தண்டிக்க வேண்டியது என குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டுகளை 1, 2, 3, 4 எதிரிகள் ரூ.6,91,680/- கையாடல் செய்து அதனை மறைக்கும் விதமாக ஆவணங்களை அரசுக்கு எதிராக உட்கருத்துடன் மாற்றி அமைத்து மேற்படி அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தும் விதமாக ரூ.6,91,680/- பணத்தினை கையாடல் செய்துள்ள சூழ்நிலையில் மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரிகளை தண்டிக்காமல் மாறாக விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

ix) மேற்படி வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு நிரூபணம் செய்யும் விதமாகவும் மேற்படி குற்றச்சாட்டுகளை மெய்ப்பிக்கும் விதமாகவும் விசாரணை நீதிமன்றம் சாட்சியத்தில் தெள்ளத் தெளிவாக சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்து 1 முதல் 4 எதிரிகளுக்கு குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு பகரப்பட்டிருக்க வேண்டும்.

x) மேற்படி டாஸ்மாக் கடை எண்.7664-ல் எதிரி ரூ.6,91,680/- பணம்

கையாடல் செய்தது அதற்கான ஆவணங்கள் சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அத்துடன் மேற்படி ஆவணங்களை ஊர்ஜிதம் செய்யும் விதமாக மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னீடு இந்த எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருப்பது சட்டத்திற்கு முரணாக உள்ளது.

xi) மேலும் அரசு தரப்பில் எதிரிகள் கையாடல் செய்ததற்கான ஆவணங்களை விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் முறையாக சமர்ப்பித்து மேலும் எதிரிகள் பணிபுரிந்த டாஸ்மாக் கடைக்கு முந்தைய மாதத்திற்கு சரக்குகள் இருப்பு மற்றும் எதிரிகள் வேலை பார்த்த கடைக்கு சரக்குகள் அனுப்பப்பட்ட விவரங்கள் மற்றும் விற்பனை செய்யப்பட்ட விவரங்கள் மேலும் எதிரிகள் ரூ.6,91,680/- பணம் கையாடல் செய்த பணத்தின் கணக்குகள் ஆவணங்களாக அரசு தரப்பில் நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதற்கான சாட்சியத்தை நிரூப்பிக்கும் விதமாக சாட்சியம் விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பு வழக்கிற்கு வலுவூட்டிய நிலையில் விசாரணை நீதிமன்றம் மேற்படி ஆவணங்களையும் கருத்தில் கொள்ளாது எதிரிகளை விடுதலை செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

xii) மேலும் அரசு மதுபானக் கடையில் 7664 தணிக்கைக்கு சென்ற தாசில்தார் விஜயகுமாரி மற்றும் மணிகண்டன் தணிக்கை செய்ய உத்தரவிட்ட மாவட்ட மேலாளர் கோபிநாத் ஆகியோர் சாட்சியங்கள் மேற்படி வழக்கில் விசாரிக்கப்பட்டு சமூகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றும், மேலும் மாவட்ட மேலாளர் வழக்கு போன்ற கையாடல் புகாரில் சிக்கி அவர் மீது

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:08:49 +0530

வழக்கு நிலுவையில் உள்ளது என கருதி விசாரணை நீதிமன்றம் இந்த எதிரிகளை விடுதலை செய்திருப்பது ஏற்புடையதல்ல. ஏனெனில் தணிக்கை செய்த சமயத்தில் முறையாக அரசு விதிகளின்படி மாவட்ட மேலாளர் தணிக்கை செய்வதற்கு மாவட்டம் தோறும் உத்தரவிட்டு அதன்படி உரிய அலுவலர்கள் மூலமாக மாவட்டம் தோறும் மதுபானக் கடைகளில் தணிக்கை செய்யப்பட்டு மேற்படி 7664 கடையில் 1, 2, 3, 4 எதிரிகள் அரசுக்கு எதிராக இழப்பு ஏற்படுத்தும் விதமாக கையாடல் செய்துள்ள நிலையில் மேற்படி அரசுக்கு ஏற்பட்ட இழப்பினை கருத்தில் கொண்டும் விசாரணை நீதிமன்றம் மேற்படி எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டுமே தவிர மாறாக மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து இந்த எதிரிகளை விடுதலை செய்திருப்பது ஏற்புடையதல்ல.

xiii) மேலும் எதிரிகள் தரப்பில் மேற்படி வழக்கினை எதிரி குற்றமற்றவர் என விசாரணை நீதிமன்றத்தில் நிரூபணம் செய்வதற்கு எவ்வித சாட்சியங்களும், சான்றாவணங்களும் முன்னிறுத்தப்படாத சூழ்நிலையிலும் மேலும் எதிரிகள் மேற்படி கடையில் மேலாளராக பணி புரியவில்லை என எவ்வித சான்றாவணங்களையும், சாட்சியங்களையும் விசாரணை நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்படாத சூழ்நிலையில், மேலும் எதிரிகள் தான் செய்த தவறினை ஒப்புக்கொண்டு கையாடல் செய்த பணத்தினை திரும்ப செலுத்திவிடுவதாக ஒப்புக்கொண்டு 1, 2 எதிரிகள் ரூ.2,00,000/- செலுத்தி உள்ள நிலையில் மேற்படி விசாரணை நீதிமன்றம் எதிரிகள் மேற்படி கடையில் பணிபுரிந்து கையாடல் செய்தது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு மேற்படி எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தண்டனை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:08:57 +0530

வழங்கி இருக்க வேண்டுமே தவிர மாறாக விடுதலை செய்திருப்பது சட்டவிதிகளுக்கு முரணாக உள்ளது.

xiv) மேலும் அரசு தரப்பில் 1 முதல் 8 வரையிலான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு அரசு தரப்பு சான்றாவணங்கள் 1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு மேற்படி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 409, 120(பி) படி குற்றம் புரிந்ததாக சாட்சியங்கள் மூலமும், சான்றாவணங்கள் மூலமும் தெள்ளத் தெளிவாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் எதிரிகளையும், 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2, 3, 4 எதிரிகள் விற்பனையாளர்களாகவும் பணிபுரிந்து ரூ.6,91,680/- பணம் கையாடல் செய்து மேற்படி பணத்தினை அரசிற்கு செலுத்தாமல் தனது சொந்த செலவிற்கு செலவு செய்து வந்துள்ளார்கள் என்று கருத்தில் கொண்டு மேற்படி எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தண்டனை வழங்கி இருக்க வேண்டுமே தவிர மாறாக விடுதலை செய்திருப்பது சட்ட விதிகளுக்கு முரணாக உள்ளது.

xv) மேற்படி மதுபானக் கடையில் 1-ம் எதிரி மேற்பார்வையாளராகவும், 2-ம் எதிரி விற்பனையாளராகவும் பணிபுரிந்து 1, 2 எதிரிகள் ரூ.2,00,000/- பணம் கையாடல் செய்து செய்த பணம் திருப்பி செலுத்தியது போக மீதமுள்ள பணம் ரூ.4,91,680/- இன்று வரை எதிரிகள் வசம் உள்ள நிலையில் மேற்படி ரூ.4,91,680/- பணம் இன்று வரை அரசிற்கு பெரும் இழப்பினை ஏற்படுத்தியுள்ள நிலையில், மேற்படி விசாரணை நீதிமன்றம் எதிரிகள் இழப்பு ஏற்படுத்தியது உண்மை என அரசு தரப்பு ஆவணங்கள் மூலம் தெரிய வருவதாகவும் ஊர்ஜிதம் செய்துவிட்டு 1, 2, 3, 4

எதிரிகள் கையாடல் செய்த பணம் புகாரில் முரணாக உள்ளது என்று கருதி 1, 2, 3, 4 எதிரிகளை விசாரணை நீதிமன்றம் விடுதலை செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பாக உள்ளது.

எனவே, மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டினை கோப்பிற்கு எடுத்து, சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2-ல் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.148/2014-ல் கடந்த 29.04.2019-ம் தேதியன்று வழங்கிய தீர்ப்பை நீக்கரவு செய்து இந்த மேல்முறையீட்டை அனுமதித்து உத்தரவிட வேண்டி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. <u>இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்</u>:-

1 விசாரணை நீதிமன்றம் எதிரிகள் மீதுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவுகள் 409, 120(பி)-ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று கண்டுணர்ந்திருப்பது சரியானதா?

2 விசாரணை நீதிமன்றமான சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டு பட்டிகை வழக்கு எண்.148/2014-ல் கடந்த 29.04.2019-ம் தேதியன்று இவ்வழக்கு எதிரிகள்/ எதிர்மேல்முறையீட்டாளர்களை விடுதலை செய்து பிறப்பித்த தீர்ப்பு ரத்து செய்யத்தக்கதா அல்லது நிலைநிறுத்தத்தக்கதா? அல்லது மாற்றியமைக்கத்தக்கதா?

3 இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

<u>பிரச்சனைகள் : 1 முதல் 3</u>:-

7) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:09:14 +0530

21.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் சிவகங்கை மாவட்டம், திருப்பாச்சேத்தி அரசு டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுபானக்கடை எண்:7664-ல் 26.05.2013-ம் தேதி 1-வது சாட்சி சிவகங்கை டாஸ்மாக் லிமிட் மாவட்ட மேலாளர் அவர்கள் உத்தரவுபடி சாட்சி-2, டாஸ்மாக் தாசில்தார் மற்றும் ஆடிட்டர் உதவியாளர்களுடன் சாட்சி-1 தணிக்கை குழுவாக சென்று மேற்படி மதுபானக்கடையை நூறு சதவீத மாதாந்திர தணிக்கை மேற்கொண்ட போது தணிக்கை இறுதியில் சரக்கு வரவு இருப்பு மற்றும் விற்பனை தொகையில் வங்கியில் செலுத்தாமல் ரூ.6,91,680/- குறைவு தொகையை மேற்படி டாஸ்மாக் கடையில் பணிபுரிந்த மேற்பார்வையாளர் 1-வது எதிரி மேற்படி கடையின் விற்பனையாளர் 2 முதல் 4 எதிரிகள் ஒன்று சேர்ந்து கையாடல் செய்து, கையாடல் செய்த பணத்தை எதிரிகள் அனைவரும் பகிர்ந்து கொண்டும், டாஸ்மாக் நிர்வாகத்திற்கு சேரவேண்டிய அரசு பணம் ரூ.6,91,680/-யை கையாடல் செய்து நம்பிக்கை மோசடி செய்து குற்றம் புரிந்துள்ளதாக குறிப்பிட்டு 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 409, 120(*b*)-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

8) இருதரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து விசாரணை நீதிமன்றம் எதிரிகள் இதச பிரிவுகள் 409, 120(பி)-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய மேல்முறையீட்டாளர் இந்த குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

9) இவ்வழக்கில் உள்ள சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ள அ.சா.1 திரு.சிலம்பரசன் என்பவர் தணிக்கை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:09:23 +0530

செய்தது பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சி. அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் தணிக்கைக்கு தணிக்கை குழுவுடன் சென்று தணிக்கை செய்தது பற்றி கூறும் சாட்சிகள். அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 2013-ம் ஆண்டு சிவகங்கை மாவட்ட டாஸ்மாக் அலுவலகத்தில் மாவட்ட மேலாளராக பணிபுரிந்து வந்ததாகவும், தங்களது மாவட்ட மேலாளர் அலுவலகம் மாதந்தோறும் தங்கள் எல்கைக்குட்பட்ட டாஸ்மாக் கடைகளை ஆடிட்டர் மூலமாக ஆய்வு செய்வது வழக்கம் என்றும், அதன்பேரில் கடை எண்.7662 என்ற டாஸ்மாக் கடையை ஆய்வு செய்வதற்காக ஆய்வு குழுவை 26.05.2013-ம் தேதி தான் அனுப்பி வைத்ததாகவும், அந்தக் கடை திருப்பாச்சேத்தியில் உள்ளது என்றும் மேற்படி கடையை ஆய்வு செய்ததில் ரூ.6,91,680/- கையிருப்பு மதுபானத்தில் குறைவாக இருந்தது என்றும், கையிருப்பை விற்பனை செய்துவிட்டு வரவு வைக்காமல் இருந்தால் தான் அவ்வாறு இருக்க வாய்ப்புண்டு என்றும், இதுசம்பந்தமாக டாஸ்மாக் தணிக்கை குழுவினர் ஆய்வறிக்கை சமர்பித்தார்கள் என்றும், தான் காவல் நிலையத்தில் புகார் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

10) மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் பொதுவாக சரக்குகள் போக்குவரத்தில் சேதமடையலாம் என்றும், கடையில் இருப்பில் இருக்கும் போது கீழே விழுந்தும் சேதமடையலாம் என்றும், ஆடிட்டர் ரிப்போர்ட்டிங் அடிப்படையில் அதில் கண்டுள்ள விவரங்கள் அ.சா.1 குறிப்பிட்டுள்ளதாக கூறியுள்ளேன் என்றும், 1 முதல் 4 எதிரிகள் நிரந்தர பணியாளர்கள் இல்லை என்றும், மேற்படி உத்தரவு ஆணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை

என்று கூறியுள்ளார்.

11) அசா.2 தன் முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 2014-ம் ஆண்டு சிவகங்கை மாவட்ட டாஸ்மாக் பிரிவில் மாவட்ட மேலாளராக பணிபுரிந்து வந்ததாகவும், திருப்பாச்சேத்தி கடை எண்:7664 என்ற கடை வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை தான் காவல் துறையில் புலன்விசாரணையில் ஒப்படைத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12) மேலும் அ.சா.3 தனது சாட்சியத்தில் கடந்த 2014-ம் வருடம் சிவகங்கை டாஸ்மாக் பிரிவில் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக இருந்து வந்தேன் என்றும், கடந்த 2013-ம் ஆண்டு தங்களது மாவட்ட மேலாளர் அலுவலகத்திலிருந்து கடை எண்:7664-யை ஆய்வு செய்ய சென்றார்கள் என்றும், மேற்படி வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை போலீசார் வாங்கி செல்ல தங்கள் அலுவலகத்திற்கு வந்த போது தான் மேலாளருக்கு உதவியாக இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் எந்தெந்த கடைகளில் யார் யார் வேலை பார்க்கிறார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.7 ஆவணங்களை தான் கொடுத்தேன் என்பதற்கு ஒப்புதல் கடிதம் ஏதும் பெறவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13) மேலும் இவ்வழக்கில் அ.சா.4 தனது சாட்சியத்தில் சிவகங்கை மாவட்ட டாஸ்மாக் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக 2014-ம் ஆண்டு பணிபுரிந்து வந்ததாகவும், வழக்கின் எதிரிகள் அனைவரையும் தெரியும் என்றும்,

அவர்கள் அனைவரும் 7664 என்ற கடை எண் கொண்ட டாஸ்மாக் கடையில் வேலை பார்த்து வந்ததாகவும், அந்த கடை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அனைத்து இதற்கு முன்பு சாட்சியம் அளித்த அ.சா.3-ன் வசம் இருப்பதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்த காலத்தில் இருப்பு குறைவு ஏற்படுத்திய கடைகளின் விவரம் முடியப்பன் தான் பார்த்து வந்ததாகவும், அந்த பொறுப்புகள் அவ்வப்போது மாறுபடும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14) மேலும் இவ்வழக்கில் அ.சா.5 தனது சாட்சியத்தில் கடந்த 26.05.2013-ம் தேதி டாஸ்மாக் கடையில் ஆய்வு நடந்ததாகவும், அந்தக் கடை திருப்பாச்சேத்தியில் உள்ளதாகவும், தன்னுடன் ரமேஷ் மற்றும் குமார் என்ற தணிக்கை உதவியாளர்கள் வந்ததாகவும், தங்களை அந்தக் கடையில் தணிக்கை செய்ய சிதம்பரம் என்ற ஆடிட்டர் பணித்திருந்தார் என்றும், அதன் பேரில் தான் தாங்கள் அங்கு சென்றதாகவும், அங்கு சென்று டாஸ்மாக் சரக்கு கையிருப்பு மற்றும் வரவு செலவு குறைவு ஆகியவற்றை ஆய்வு செய்ததாகவும், ஆவணத்தில் உள்ள 2-வது சாட்சி கையெழுத்து தன்னுடையது என்றும், தாங்கள் ஆய்வு செய்த கடையில் இருந்த சூப்பர்வைசர் மற்றும் சேல்ஸ் மேன் அளித்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், ஆய்வறிக்கையை தாங்கள் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்துவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில் சிதம்பரம் அசோசியேட் ஆடிட் கம்பெனியில் வேலை பார்த்ததாகவும், அந்த சமயத்தில் அந்த

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:09:49 +0530

நிறுவனத்தில் வேலை பார்த்ததற்குண்டான அடையாள அட்டை எதையும் தான் தாக்கல் செய்யவில்லை என்றும், பொதுவாக வாய்மொழி உத்தரவாக தணிக்கை மேற்கொண்டோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15) மேலும் இவ்வழக்கில் அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த 2013-ம் ஆண்டு சிதம்பரம் என்ற ஆடிட்டரிடம் தான் வேலை பார்த்து வந்த சமயத்தில் தனது தம்பியுடன் தான் டாஸ்மாக் கடைகளுக்கு ஆடிட்டிங் செல்லும் போது உடன் செல்வது வழக்கம் என்றும், பொதுவாக தன்னையும் காவல் துறையினர் இவ்வாறான வழக்குகளில் விசாரிப்பது வழக்கம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16) மேலும் இவ்வழக்கில் அ.சா.7 தனது சாட்சியத்தில் 1-வது எதிரி சங்கரநாராயணன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும், அந்த கையொப்பத்தை தான் கடந்த 2014-ம் ஆண்டு திருப்புவனத்தில் வைத்து சங்கரநாராயணன் என்பவரையும் மற்றும் இரு ஆட்களையும் காவல் துறையினர் பிடித்து இருப்பதாகவும், அதற்கு சாட்சியாக தன்னிடம் கையெழுத்து செய்ய சொன்னதன் பேரில் தான் அதில் கையெழுத்து செய்ததாகவும், காவல் துறையினர் சங்கரநாராயணனிடம் வாக்குமூலம் வாங்கிவிட்டு தன்னிடம் சாட்சியாக கையெழுத்து செய்யச் சொன்னார்கள் என்றும், அதனால் தான் கையெழுத்து செய்ததாகவும், தான் கையெழுத்து செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.7 தனது குறுக்கு விசாரணையில் தான் கையொப்பம் செய்த பேப்பரில் உள்ள விவரங்கள் யார் எழுதினார்கள் என்று தனக்கு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:09:57 +0530

தெரியாது என்றும், தான் குடியிருக்கும் தெருவில் அருள்மொழிவர்மன் என்ற சார்பு ஆய்வாளர் இருக்கிறார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17) மேலும் இவ்வழக்கில் அ.சா.8 தனது சாட்சியத்தில் கடந்த 2014-ம் ஆண்டு சிவகங்கை மாவட்ட குற்றப் பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது இந்த வழக்கின் புகார்தாரர் 27.05.2013-ம் தேதி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் அளித்த புகாரின் பேரில் 21.02.2013-ம் தேதி குற்ற எண்.2/2014-ன் கீழ் இதச பிரிவுகள் 409, 120(பி) ஆக வழக்கு பதிவு செய்து வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் அவர்களது பார்வைக்கு வைத்ததாகவும், ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.8 தனது குறுக்கு விசாரணையில் அ.சா.ஆ.1 புகாரில் பெறுநர் என்ற இடத்தில் துணை கண்காணிப்பாளர் என டைப் செய்யப்பட்டு அதில் துணை என்பது ஒயிட்னரால் அழிக்கப்பட்டுள்ளது என்றும், அதே அ.சா.ஆ.1 புகார் டைப் செய்யப்பட்டுள்ளது என்றும், அதில் வெங்கடேஸ்வரன் என்று இடைசெருகலாக பேனாவால் எழுதிக் காட்டப்பட்டுள்ளது என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய எந்த குறிப்பும் காட்டப்படவில்லை என்றும், முதல் தகவல் பதிவு செய்வதற்கு முன்பு எதிரியை அழைத்து விசாரணை செய்யவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கையின் பின்பக்கம் உள்ள விவரங்களை தான் எழுதியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

18) மேலும் இவ்வழக்கில் ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது, இவ்வழக்கின் மாவட்ட மேலாளர் அ.சா.1 சிலம்பரசன் கடையை ஆய்வு

செய்வதற்காக ஆய்வு குழுவினை 26.05.2013-ல் அனுப்பி வைத்ததாகவும், ஆய்வு மேற்கொண்டதில் ரூ.6,91,680/- கையிருப்பு மதுபானத்தில் குறைவு இருந்ததாகவும், கையிருப்பை விற்பனை செய்துவிட்டு அதனை வரவு வைக்காமல் இருந்தால் தான் அவ்வாறு இருக்க வாய்ப்பிருக்கிறது என்றும், அதனை கையாடல் என்று கூறுவோம் என்றும், புகாரை தான் கொடுத்ததாகவும், அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளதை வைத்து பார்க்கும் போது புகார் 27.05.2013-ல் கொடுக்கப்பட்டதாக காட்டப்பட்டிருந்தாலும், இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது சுமார் 7 மாதங்கள் கழித்து 22.01.2014-ல் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும், ஆனால் மேற்படி முதல் தகவல் அறிக்கையின் பின்பக்கத்தில் சார்பு ஆய்வாளர் அருள்மொழிவர்மன் என்பவர் கையொப்பத்தின் கீழ் 02.01.2014 என தேதியிட்டு உள்ளதையும், முதல் தகவல் அறிக்கை எந்தத் தேதியில் பதிவு செய்யப்பட்டது என்பது இந்த வழக்கில் குழப்பத்திற்குரிய விசயமாக உள்ளது என்பதையும் இந்நீதிமன்றம் காண முடிகிறது.

19) மேலும் இவ்வழக்கில் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் தான் 13.03.2013-ல் மாவட்ட மேலாளராக பொறுப்பேற்றதாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக 13.06.2013-ல் மேலும் ஒரு புகார் கொடுக்கப்பட்டதாகவும், மேற்படி டாஸ்மாக் கடையில் தணிக்கை செய்ய எழுத்துமூலமான உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றும், வாய்மொழி உத்தரவு தான் பிறப்பிக்கப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளதையும், மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் அ.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள விவரத்தின் படி மாவட்ட மேலாளர் கோபிநாத்

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:10:14 +0530

என்பவர் இதே புகார் சம்பந்தமாக 13.06.2013-ல் ஒரு புகார் கொடுத்திருந்ததாகவும், ஒரு புகார் காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளதையும், மேலும் அ.சா.5 தனது சாட்சியத்தில் தான் சிதம்பரம் என்ற ஆடிட்டரிடம் வேலை பார்த்ததாகவும், தாவா கடையை தணிக்கை செய்ய அவர் தான் பணித்து இருந்தார் என்றும், அதன் பேரில் தணிக்கை செய்ததாகவும், தணிக்கை அறிக்கையை மாவட்ட மேலாளருக்கு அனுப்பி வைத்ததாகவும் கூறிவிட்டு தனது குறுக்கு விசாரணையில் மேற்படி டாஸ்மாக் கடையை தணிக்கை செய்ய மண்டல மேலாளரிடமிருந்து உத்தரவு வரப்பெற்றதா அல்லது சிதம்பரம் அசோசியேட்ஸ் ஆடிட் கம்பெனியிலிருந்து உத்தரவு வரப்பெற்றதா என்று ஞாபகமில்லை என்றும், வாய்மொழி உத்தரவாக தான் தணிக்கை செய்ததாகவும், அன்றைய தினம் திடீர் ஆய்வு தான் நடைபெற்றது என்றும், எப்பொழுதும் போல் மாதாந்திர ஆய்வு நடைபெறவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதும் தெளிவாக தெரிகிறது.

20) மேலும் இவ்வழக்கில் அ.சா.9 புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில் இந்த வழக்கில் புகார்தாரர் சிலம்பரசனுக்கு முன்னதாக மாவட்ட மேலாளராக கோபிநாத் என்பவரை தான் இந்த வழக்கில் விசாரணை செய்யவில்லை என்றும், மேற்படி கோபிநாத்தின் பணிக்காலத்தில் தான் முறைகேடுகள் நடந்துள்ளதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், தனது விசாரணையில் எதிரிகள் பணம் கையாடல் செய்துள்ளதாக தெரியவரவில்லை என்றும், 1, 2 எதிரிகள் நிரந்தர பணியாளர்கள் இல்லை என்றும், சம்பவம் நடந்த

காலகட்டத்தில் மாவட்ட மேலாளர் கோபிநாத் என்பவர் டாஸ்மாக் நிறுவனத்தில் ஏற்பட்ட முறைகேடுகளுக்காக பணியிடை நீக்கம் செய்யப்பட்டு இருந்தார் என்றும், மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களையும் வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்களையும் பரிசீலித்துப் பார்த்ததில் மேற்படி பிரச்சனைக்குரிய கடையை திடீர் ஆய்வு நடத்த உரிய அதிகாரியால் எழுத்து பூர்வமான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

21) மேலும் இந்த வழக்கில் தணிக்கைக்கு டாஸ்மாக் நிறுவனத்தின் சார்பாக தணிக்கையாளர்களுடன் சென்ற தாசில்தார் விஜயகுமாரி என்பவரும், டாஸ்மாக் நிறுவனத்தின் மேலாளர் அலுவலகத்தில் பட்டய தணிக்கையாளராக பணிபுரிந்து வந்ததாக கூறப்படும் சாட்சி மணிகண்டன் என்பவரும் விசாரணை நீதிமன்றத்தின் முன்பு சாட்சியம் அளிக்கவில்லை என்பதை வைத்துப் பார்க்கும் போது மேற்படி டாஸ்மாக் கடையை நூறு சதவீத தணிக்கை செய்யப்பட்டதா என்பதும், அதில் இருப்பு குறைவு கண்டறியப்பட்டதா என்பதும், அந்த இருப்பு குறைவிற்கு தற்காலிக பணியாளர்களான 1 முதல் 4 எதிரிகள் அரசு தரப்பில் கூறுவது போல் கூட்டு சதி செய்து குற்றமுறு நோக்கத்தில் சுயலாபம் அடையவும், மேற்படி டாஸ்மாக் நிறுவனத்திற்கு இருப்பு குறைவை ஏற்படுத்தி பணத்தை கையாடல் செய்தார்கள் என்பது அரசு தரப்பில் உரிய சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்பதும் விசாரணை நீதிமன்றம் கூறியிருப்பது நம்பத்தகுந்த வகையில் இருக்கிறது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:10:31 +0530

21.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

22) எனவே மேற்கண்ட வகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் விசாரணை நீதிமன்றம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/எதிரிகள் குற்றவாளிகள் இல்லையென்று விடுதலை செய்து தீர்வு கண்டுள்ளதில் சட்டப்படியும், வழக்கு பொருண்மைகளின்படியும் வழங்கியுள்ள தண்டனை தீர்ப்புரையில் குறுக்கிட வேண்டிய அவசியம் ஏதுமில்லை என இந்நீதிமன்றம் கருதுவதால், இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், சிவகங்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஆண்டுபட்டிகை வழக்கு எண்.148/2014-ல் கடந்த 29.04.2019-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏபரல் திங்கள் 21-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.21 18:10:41 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

நகல்:
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2,
சிவகங்கை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை.
குற்றவியல் மேல்முறையீட்டு
வழக்கு எண்.96/2025
சீரான/வரைவு/ தீர்ப்புரை
நாள்: 21.04.2026

21.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை